# அப்போஸ்தலர்கள் - மத்தேயு

# லூக்கா 6:12-16

**லூக்கா 6:12-16, அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி: ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே.**

**முதல் குழுவினர்:**

1. சீமோன் என்னும் பேதுரு
2. அந்திரேயா
3. யாக்கோபு
4. யோவான்

பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானின் பெயர்கள் பட்டியலில் மாறிமாறி இடம்பெற்றுள்ளது. பேதுருவின் பெயர் எல்லாவற்றிலும் முதலில் இடம்பெறுகிறது. ஆனால் இவர்களின் பெயர்கள் எப்போதுமே முதல் குழுவாகவே கருதப்படுகிறது.

**இரண்டாம் குழுவினர்:**

1. பிலிப்பு
2. பர்த்தொலொமேயு (அ) நாத்தான்வேல்
3. மத்தேயு
4. தோமா

இந்த இரண்டாவது குழுவும் எல்லா பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது.

பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு மற்றும் தோமா ஆகிய நால்வரின் பெயர்கள் அடிக்கடி இடம் மாறி இடம்பெற்றாலும், இந்த இரண்டாம் குழுவில் பிலிப்புவின் பெயரே எப்போதும் முதலாவதாக இடம்பெறுகிறது.

**மூன்றாம் குழுவினர்:**

1. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு
2. செலோத்தே என்னப்பட்ட சீமோன்
3. யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ்
4. யூதாஸ்காரியோத்து

எல்லா பட்டியலிலும் ஒன்றுபோலவே இடம்பெறுகிறது. நடுவில் இருக்கும் செலோத்தே என்னப்பட்ட சீமோன் மற்றும் யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ் ஆகிய இருவரின் பெயர்களும் அவ்வப்போது இடம் மாறி இடம்பெறுகிறது.

ஆனால் அப்பேயுவின் குமாரனாகிய யாக்கோபின் பெயர் முதலிலும் யூதாஸ்காரியோத்தின் பெயர் கடைசியிலும் இடம்மாறாமல் இடம்பெற்றுள்ளது.

## மத்தேயு

மத்தேயு என்பது பரிட்சயமான பெயர். அந்நாட்களில் பல நபர்களுக்கு மத்தேயு என்று பெயரிடப்பட்டது. ஆங்கிலேயர்களின் பெயர்களில் இப்பெயர் அதிகம் இடம்பெறும். பொதுவான ஒரு பெயர்.

அவருடைய இயற்பெயர் லேவி. இயேசு அவரை மத்தேயு என்று அழைத்தார் (சீமோனின் பெயரை பேதுரு என்று மாற்றியது போல).

அவருடைய **கிரேக்கப் பெயர்;** மத்தேயு, **எபிரெய பெயர் லேவி** என்பதாகும். அதாவது, அப்போஸ்தலர் பவுல், சவுல் என்று அழைக்கப்பட்டது போல.

மத்தேயு அல்பேயுவின் குமாரன்.

**மாற்கு 2:14, அவர் நடந்துபோகையில், அல்பேயுவின் குமாரனாகிய லேவி ஆயத்துறையில் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான்.**

இயேசு அவருக்கு மத்தேயு என்று பெயர் வைத்தாரோ அல்லது அவரே தானாய் பெயரை மாற்றிக்கொண்டாரா என்று நமக்குத் தெரியாது. ஆனால் மத்தேயு என்பது “மட்டத்தியாஸ்” என்னும் பெயரின் சுருக்கமான பயன்பாடு.

மத்தேயு என்றால் “தேவனுடைய பரிசு” என்று பொருள்.

லேவி என்றால் “ஒன்றாக சேர்க்கப்படுதல்” என்று பொருள்.

மத்தேயு நீளமான சுவிசேஷத்தை எழுதியுள்ளதால், மத்தேயுவைக் குறித்து நாம் அதிகம் கற்றுக்கொள்ள முடியும் என்று ஊகிக்கலாம். ஆனால் மத்தேயுவைக் குறித்து நமக்கு வெகு சில தகவல்களே உள்ளது என்பதே உண்மை.

மத்தேயு மிகவும் தாழ்மையுள்ளவர் என்பதை மட்டும் நாம் உறுதியாய் சொல்ல முடியும்.

தன்னுடைய சுவிசேஷம் முழுவதிலும், தன்னைக் குறித்து மத்தேயு இரண்டே வாக்கியங்களை மட்டும் பதிவுசெய்துள்ளார்.

**மத்தேயு 9:9, இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து, அவருக்குப் பின்சென்றான்.**

இவ்வளவு பெரிய சுவிஷேச பதிவில் அவரைக் குறித்து வெறும் இரண்டே வாக்கியங்களை பதிவு செய்துள்ளது, அவருடைய தாழ்மையை காண்பிக்கிறது. அதுவும் மிக எளிமையான பதிவுகள்.

மத்தேயு தன்னைக் குறித்து சொன்னது இதுவே.

மத்தேயுவின் வாழ்க்கைக் குறித்து, லூக்காவின் பதிவுகளிலிருந்தே நாம் அறிந்து கொள்கிறோம்.

**லூக்கா 5:27, இவைகளுக்குப் பின்பு, அவர் புறப்பட்டு, ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும் பேருடைய ஒரு ஆயக்காரனைக் கண்டு: எனக்குப் பின்சென்று வா என்றார்.**

இவர் ஒரு ஆயக்காரன். ஆயக்காரர்கள் பொதுவாக லஞ்சகர்கர்களாய் கருதப்பட்டனர்.

ஆயக்காரர்கள் யோவான் ஸ்நானகனிடம் வந்து, உண்மையான மனந்திரும்புதலுக்கான அடையாளம் என்ன என்று கேட்டனர்.

**லூக்கா 3:12-13, ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெறவந்து, அவனை நோக்கி: போதகரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்று கேட்டார்கள். 13. அதற்கு அவன்: உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள் என்றான்.**

நேர்மையாயிருங்கள் என்பதே யோவான் ஸ்நானகன் அவருக்கு கொடுத்த ஆலோசனை. ஏனென்றால், அவர்கள் நேர்மையற்றவர்களாய் நம்பப்பட்டனர்.

லேவி என்ற பெயரில் மத்தேயு ஒரு நேர்மையற்ற ஆயக்காரனாயிருந்தான் என்று பார்க்கிறோம்.

இன்று இருப்பது போல், பண்டைய நாட்களில், பல மக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களை கொண்டிருந்தனர். இரு பெயர்களைக் கொண்டிருப்பது இயல்பு. தோமா திதிமு என்றும் அழைக்கப்பட்டார்.

பர்தொலொமேயு நாத்தான்வேல் என்றும் அழைக்கப்பட்டார்.

மத்தேயுவிற்கு லேவி என்று ஒரு பெயர் இருந்தது. மத்தேயு சுவிசேஷம் அவருடைய பெயரில் அமைந்திருப்பதால், அவரை மத்தேயு என்ற பெயரிலேயே அறிகிறோம்.

மத்தேயு சந்தேகமேயில்லாமல், தாழ்மையுள்ள ஒரு அப்போஸ்தலன். மத்தேயு சுவிசேஷம் முழுவதிலும் மத்தேயு தன்னைக் குறித்து எதையுமே பதிவிடவில்லை.

மத்தேயு சொன்ன வார்த்தைகள் அவருடைய சுவிசேஷத்தில் பதிவாகவில்லை. அவருடைய சுவிசேஷத்தில் அவருடைய பெயர் இரண்டேதரம் தான் உபயோகிக்கப்பட்டுள்ளது.

முதல்தரம் தனக்கு பெயரிடப்பட்ட சம்பவத்தில், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின் பேரில் தன்னுடைய மனமாற்றத்தைக் கூறுகிற சம்பவம்.

இரண்டாந்தரம் 10:3இல், மற்ற அப்போஸ்தலர்களின் பெயர் பட்டியலை வரிசைப்படுத்தும் போது, அதில் தன்னுடைய பெயரையும் இணைத்துள்ளது.

இவர் தாழ்மையுள்ள ஒரு அப்போஸ்தலர்.

தன் வாழ்க்கை முழுவதும் தான் யார் என்பதையும் தான் எதற்காய் வந்திருக்கிறோம் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அவர் சுவிசேஷ எழுத்தாளராய் மாறி இயேசுவின் வாழ்க்கை சரிதையை பெரிய மகிமையான பதங்களைக் கொண்டு எழுதுவதற்கான சிலாக்கியத்தைப் பெற்று, இயேசுவை மகிமையான ஒரு ராஜாவாக தன் எழுத்துக்களில் சித்தரித்துள்ளார்.

வியக்கத்தக்க ஆச்சரியங்களை பதிவிட்டதினால் மத்தேயு ஒருவேளை வாயடைத்துப் போயிருந்திருக்கக்கூடும். பாவியிலும் பாவியான இவருக்கு புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்தை எழுதும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

**ஆயக்காரரைக் குறித்து?**

யூதர்களின் பார்வையில் இது மனுஷீகத்தின் ஒரு கறை.

- இஸ்ரவேலர்கள் எல்லோரைக்காட்டிலும் இவர்கள் அதிகமாய் தோற்றுப்போன ஒரு கூட்டம்.
- தாழ்த்தப்பட்டவர்களிலும் தாழ்த்தப்பட்டவர்கள்.
- இவர்கள் துரோகிகள்.

**தேவன் எவ்வளவு ஆழத்தில் தேடுவார்?**

**யாரை இரட்சிப்பார்?**

எவ்வளவு ஆழம் வேண்டுமானாலும் போவார்.

அப்பேற்பட்ட ஆயக்காரரை இயேசு இரட்சித்து, அப்போஸ்தலராக்கியதை, வேதபாரகரினாலும் பரிசேயரினாலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

## ரோமாபுரியின் வரிவசூலிக்கும் அமைப்பு:

ரோம சாம்ராஜ்யம் உலகத்தையே ஆட்சிசெய்தது. இஸ்ரவேலும் அதின் அதிகாரத்தின் கீழ் செயல்படவேண்டியதாயிருந்தது. ரோமர்களின் ஆதிக்கம் என்பது பல்வேறு காரியங்களை உள்ளடக்கியிருந்தது.

ரோம இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இஸ்ரவேல் இயங்கவேண்டியிருந்தது. புறஜாதி ராஜாக்களின் கட்டுப்பாட்டிற்குள், குறிப்பாய் இடுமேய ராஜாக்களாகிய ஏரோது, ஏரோது அந்திபாஸ் போன்றவர்கள் கலிலேயாவில் ஆட்சி செய்தனர்.

ரோமர்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருந்த அனைத்து தேசத்தின் மீதும் வரியை நியமித்தனர். கலிலேயாவின் மீதும் வரி திணிக்கப்பட்டது. அந்த வரி பல ஆயக்காரர்களின் மூலம் வசூலிக்கப்பட்டு, ஏரோது அந்திபாஸிடம் ஒப்படைக்கப்படும். பின் அவைகள் ரோம பேரரசிடம் ஒப்படைக்கப்படும்.

ரோம விதிமுறையின்படி, ஏரோது அந்திபாஸின் நாட்களில் வரி வசூலிக்கும் உரிமையை அதிக தொகைக்கு ஏலம் எடுப்பவர்களுக்கு அதை விட்டுவிடுவது வழக்கமாயிருந்தது. இது மிகவும் லாபகரமான வியாபாரமாயிருந்தது என்பதினால், பொய் சொல்லுவதற்கோ, ஏமாற்றுவதற்கோ, திருடுவதற்கோ, மக்களை வஞ்சிப்பதற்கோ, சற்றும் தயங்காத நேர்மையற்ற மனிதர்கள் இந்த வரிவசூலிக்கும் உரிமையை பெறுவதற்கு முந்துவர்.

இவர்கள் தங்கள் யூதபாரம்பரியத்தின் பெருமையை நிலைநாட்டவேண்டியதில்லை. ஏனென்றால், இவர்கள் துரோகிகளிலும் துரோகிகளாய் கருதப்பட்டனர். இவர்கள் தங்கள் ஜனத்தின் பணத்தை வஞ்சித்தது மட்டும் குற்றமில்லை. அதைக் கொண்டுபோய் புறஜாதியினரிடத்தில் ஒப்படைத்ததை மக்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்த சூழ்நிலையின் ஏதோ ஒரு கட்டத்தில் மத்தேயுவும் தன் பிறப்புரிமையை விற்றுவிட்டார். தன் பாரம்பரிய அங்கீகாரத்தையும் மரியாதையையும், சமுதாய அங்கீகாரத்தையும் மறந்து, தன் குடும்பத்தையும் கனவீனப்படுத்தியிருக்க வேண்டும்.

துன்மார்க்கரோடும், அநீதிக்காரரோடும், மற்ற ஆயக்காரர்களோடும் இணைந்து வரி சேகரிக்கும் உரிமையை பெற்றிருக்கவேண்டும். அவர்கள் ரோம பேரரசிற்கு ஒப்படைக்கவேண்டிய வரித்தொகை ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நியமிக்கப்படும். அந்த தொகைக்கு அதிகமாய் வசூலிக்கப்பட்டதை ஆயக்காரர்களே எடுத்துக்கொள்ளலாம். மத்தேயுவும் அதில் ஒரு ஆயக்காரனாய் செயல்பட்டார். நிரந்தர வரி, தேர்தல் வரி மற்றும் பல வரிகள் மக்களிடம் வசூலிக்கப்பட்டது.

இந்த வகையான வரி சுமத்தல்கள் ஊழலுக்கும், கொள்ளைக்கும், மிரட்டலுக்கும், சுரண்டலுக்கும் வழிவகுத்தது. மக்களால் வரி செலுத்த முடியவில்லை என்றால், அவர்கள் கடன்காரர்களாய் மாறவேண்டும். அவர்களுக்கு 50 சதவிகிதம் வட்டிக்கு கடன் அளிக்கப்படும். அந்த தொகையை அவர்களால் திருப்பி செலுத்த முடியாவிட்டால், அடியாட்களைக் கொண்டு அவர்களின் காலை முறிக்கும்படி செய்வர். ஆயக்காரர்கள் ஒரு கொள்ளைக் கும்பலைப் போல செயல்பட வேண்டியிருந்தது.

- இவர்கள் மக்களை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நிறுத்தமுடியும்.
- அவர்களின் உடைமைகளை பரிசோதித்து, அவர்களின் நிருபங்களுக்கு வரி சுமத்த முடியும்.
- அவர்களின் உற்பத்திக்கு வரி சுமத்த முடியும்.
- சந்தைகளில் வாங்கப்பட்ட பொருட்களுக்கு வரி விதிக்க முடியும்.
- ஏற்றுமதி அல்லது இறக்குமதி வரி விதிக்கமுடியும்.
- அவர்கள் அனைத்தையும் தன்னிச்சையாக செய்யமுடியும்.
- அவர்கள் தங்களின் அடியாட்களை வைத்து வரி செலுத்தாதவர்களை காயப்படுத்தி, வரியை சேகரிக்கமுடியும்.

மத்தேயுவும் அந்த வேலையையே செய்துவந்தார். யூதர்கள் பொதுவாக ஆயக்காரர்களை வெறுத்தனர். மத்தேயுவும் அதில் ஒருவர்.

மத்தேயுவும் ஒருவேளை செல்வந்தர்களிடம் லஞ்சம் வாங்கி, ஏழைகளை வஞ்சித்து, புறஜாதியின் அதிகாரத்திற்கு உட்பட்டு செயல்பட்டிருந்திருக்கக்கூடும். யூதர்கள் தங்கள் தேவனுக்கு மட்டுமே

நியாயமாய் வரி செலுத்தவேண்டும் என்று நம்பினதினால், இந்த வரி திணிப்புகளை வெறுத்தனர்.

ஆயக்காரர்கள் ஜெப ஆலயங்களுக்குள் வருவதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. ஆயக்காரர்கள் தங்கள் ஊரில் இருக்கும் ஜெப ஆலயத்திற்கு சென்று ஆராதிப்பது என்பது முடியாத காரியம்.

**ஏன்?**

ஏனென்றால் அவர்கள் தீட்டானவர்களாய் கருதப்பட்டனர்.

ஆராதனை சடங்காச்சார விதிமுறையில் இடம்பெறும் தீட்டான விலங்குகளோடும் புறஜாதிகளோடும் இவர்கள் சமமாய் கருதப்பட்டனர். அவர்களால் ஜெப ஆலயங்களுக்குள் வர முடியவில்லை. அவ்வாறு வந்தால், அங்குள்ள காரியங்களை தீட்டுப்படுத்துவார்கள் என்றும் அவர்களின் அருகில் யாரும் சென்றால், அவர்களும் தீட்டுப்பட்டவர்களென்றும் கருதப்பட்டனர்.

இவர்கள் பொய்யர்களாய் இருந்தபடியினால், நீதிமன்றங்களில் சாட்சி சொல்லுவதற்கும் இவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

யூத இலக்கியமான டால்முத், “நீங்கள் ஆயக்காரர்களிடம் பொய் சொல்லி அவர்களை எப்போது வேண்டுமானாலும் வஞ்சிக்கலாம்” என்று சொல்லுகிறது. யூத ரபீமார்கள், யூத மக்களுக்கு இந்த சுதந்திரத்தைக் கொடுத்திருந்தனர். இதுதான் பிழைப்பிற்கான வழி. ஒருவேளை அவர்களை சேர்த்துக்கொண்டால், நாம் வழிதப்பிப்போகக்கூடும் என்று எண்ணினர்.

யூத சரித்திரத்தில் இரண்டு வகையான ஆயக்காரக் கூட்டம் இருந்ததாக டால்முத் அறிவிக்கிறது.

**1. கப்பாய்**

கப்பாய் என்ற ஆயக்காரக் கூட்டம் முதல் வகையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பொதுவான ஆயக்காரர்கள். வழக்கமாய் செலுத்தக்கூடிய வரியை வசூலிப்பவர்கள்.

இதில் நிலவரி, சொத்து வரி, மற்றும் வருமான வரி ஆகியவைகள் உள்ளடங்கும். நிலத்தில் விளையும் தானியங்களும் வரியாக வசூலிக்கப்பட்டது.

பத்தில் ஒரு பங்கு தானிய வரி வசூலிக்கப்பட்டது (10℅).

பழங்களுக்கும் திராட்சை ரசத்திற்கும் ஐந்தில் ஒரு பங்கு வரி வசூலிக்கப்பட்டது (20℅).

வருமான வரி ஒரு சதவிகிதம்.

இவைகளே நியமிக்கப்பட்ட வரிகள். இவைகளை சேகரிக்கும் பொறுப்பில் நியமிக்கப்பட்ட இந்த ஆயக்காரக் கூட்டத்தையே கப்பாய் என்று அழைத்தனர்.

சகேயுவும் இந்த வகையான ஆயக்காரக் கூட்டத்தைச் சேர்ந்தவர். இதில் மக்களிடம் மிரட்டி பணம் பறிக்கும் பல வாய்ப்புகள் இருந்தது.

## 2. மோகஸ்

மோகஸ் என்பவர்கள் குறுகிய காலத்தில் வரி வசூலிக்கும் மற்றொரு ஆயக்காரக் கூட்டம்.

இவர்கள் வாழ்வின் அன்றாட காரிங்களோடு தொடர்புடையவர்கள்.

- வேலைகள்
- ஏற்றுமதி வரி
- சாலை வரி
- தேர்தல் வரி
- பால வரி
- நிருப வரி
- பொட்டல வரி
- சந்தை வரி
- வண்டிகள் மீதான அச்சு வரி
- சக்கர வரி

மோகஸ் என்று அழைக்கப்பட்ட இந்த ஆயக்காரர்கள் துன்மார்க்கர்கள். இவர்கள் வரி வசூலிப்பவர்களில் மிகவும் உயர்ந்தவர்கள். இவர்கள் துன்மார்க்கரிலும் அதிக துன்மார்க்கமாய் செயல்பட்டனர்.

பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் என்று அதிலும் இரண்டு வகையான மோகஸ் உள்ளனர்.

பெரிய மோகஸ் ஆயக்காரர்கள் பெரிய வரி உரிமையை பெற்றிருந்தனர். இவர்கள் தங்களுடைய வரி வசூலிக்கும் ஆயத்துறைகளில் ஊழியர்களை நியமித்து வரியை வசூல் செய்தனர். மக்கள் பயணிக்கும் சாலைகளில் ஆட்களை நியமித்து, போகிற மற்றும் வருகிற மக்களை நிறுத்தி எல்லாவற்றிற்கும் இவர்கள் வரியை வசூலிப்பர்.

சிறிய மோகஸ் ஆயக்காரர்கள், வரி வசூலிக்கும் ஆயத்துறையில் அமர்ந்திருப்பர். இவர்கள் எல்லோராலும் அதிகமாய் வெறுக்கப்பட்ட கூட்டம். ஏனென்றால் இவர்கள் மக்களை நேரடியாய் பார்த்து, “உன்னுடைய பணம் எனக்கு வேண்டும், அதைக் கொடுக்கவில்லையென்றால் உன்னுடைய காலை முறித்துவிடுவேன்” என்று மிரட்டி பணம் பறிப்பவர்கள்.

இவர்கள் நேரடியான ஆயக்காரர்கள். இரக்கமற்ற கொலைப் பாதகர்கள். மிருகத்தனம் கொண்ட துன்மார்க்கர்கள். எல்லோராலும் வெறுக்கப்பட்ட ஆயக்காரர்கள். சமுதாய அந்தஸ்தில் மிகவும் கீழானவர்களாய் கருதப்பட்டனர். இன்னும் தெளிவாய் சொல்லவேண்டுமாகில், இவர்கள் சமுதாய அந்தஸ்தில் விபச்சாரிகளுக்கும் கீழானவர்களாய் கருதப்பட்டனர்.

இவர்கள் மனந்திரும்புவதும் மன்னிப்பைப் பெறுவதும் சாத்தியமேயில்லை என்றும் சில யூத இலக்கியங்கள் பதிவுசெய்கிறது. இவர்கள் மன்னிக்கப்படக் கூடாதவர்கள்.

மத்தேயு இந்த சிறிய வகை மோகஸ் கூட்டத்தைச் சேர்ந்த ஆயக்காரர்.

### அது நமக்கு எப்படி தெரியும்?

**லூக்கா 5:27, இவைகளுக்குப் பின்பு, அவர் புறப்பட்டு, ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும் பேருடைய ஒரு ஆயக்காரனைக் கண்டு: எனக்குப் பின்சென்று வா என்றார்.**

ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி

- இவர் மோசமானவர்
- இவர் கறைபடிந்தவர்
- இவர் மன்னிக்கப்படக் கூடாதவர்

- இவர் கப்பர்நகூமில் அதிகம் வெறுக்கப்பட்ட ஒரு நபராய் இருந்திருக்கவேண்டும்

ஆனால் இயேசு அவரைப் பார்த்தார்.

அவர் தன்னுடைய பார்வையை மத்தேயுவின் மீது வைத்தார். அவரோடு மத்தேயுவுக்கு ஒரு தெய்வீகமான சந்திப்பு நடக்கிறது.

அவர் அவரிடத்திற்கு போனார்.

"எனக்குப் பின்சென்று வா"

என்ன ஆச்சரியம்!

நான் ஒரு அப்போஸ்தலனை தேடுகிறேன்.

ஏசாயாவைப் போல!

"ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்"

"தான் எந்த அளவிற்கு பாவி என்பதை உணர்ந்த உன்னைப் போன்ற ஒரு மனிதனைத் தான் நான் தேடிக்கொண்டிருக்கிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து இந்த மனிதருடைய இருதயத்தை அறிந்திருந்தார்.

தெளிவான கட்டளை கொடுக்கப்படுகிறது "எனக்குப் பின்சென்று வா"

அவர் மத்தேயுவுக்கு வேறெந்த ஆலோசனையும் கொடுக்கவில்லை.

உன்னுடைய செய்கையை நீ சுத்திகரிப்பாய் என்றால், நான் உன்னைப் பயன்படுத்துவேன்.

உனக்கு சில திறமைகள் இருந்தால் நான் உன்னைப் பயன்படுத்தமுடியும்.

அவருடைய இருதயத்தை இயேசு அறிந்திருந்தார். ஒரு விளம்பரப் பலகையை வாசிப்பதுபோன்று இயேசு அவருடைய இருதயத்தை வாசித்தார். மத்தேயு இயேசுவை அறிந்திருந்தார். இயேசு கலிலேய ஊழியத்திற்கு மையஸ்தலமாய்

இந்த கப்பர்நகூம் இருந்துள்ளது. இயேசுவைக் குறித்து இந்த தருணத்தில் கலிலேயாவிலிருந்த அனைவரும் அறிந்திருந்தனர். இதுவே மத்தேயுவின் சொந்த ஊர்.

அற்புதங்களை நடப்பிக்கிறவராய், ஒரு போதகராய், தரித்திரர்கள், சிறையிருப்பிலுள்ளவர்கள், குருடர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட அனைவருக்கும் தேவன் மன்னிப்பைக் கொடுக்கிறார் என்னும் செய்தியை பறைசாற்றியவராக இயேசு அறியப்பட்டிருந்தார்.

மத்தேயு தன்னுடைய இருதயத்தில் தன்னை ஒரு ஏழையாகவும், கைதியாகவும், குருடராகவும், ஒடுக்கப்பட்டவராகவும் நம்பியிருந்தார். அவர் ஏராளமான பணத்தை சேகரித்தாலும் மக்கள் மீது அதிகாரம் செலுத்தினாலும், அவர் தன்னுடைய பாவத்தின் பாரத்தினால் உள்ளுக்குள் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தவர்.

இயேசு அவருடைய இருதயத்தைப் பார்த்திருக்க வேண்டும். அவருடைய பாவத்தை மட்டுமல்லாது, நீதியுள்ள வாழ்க்கையின் மீது அவருக்கு இருந்த தாகத்தையும் பார்த்தார்.

இதைக் கண்டு, பரிசேயர்களும் வேதபாரகர்களும் அதிர்ச்சியடைந்தனர் என்றால், மத்தேயு எவ்வளவு ஆச்சரியப்பட்டிருக்கவேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள். ஏனென்றால், பரிசேயர் வேதபாரகரைக் காட்டிலும் மத்தேயுவுக்கு தான் யார் என்பது மிக நன்றாய் தெரியும்.

அவர்களைப் பொறுத்தவரையில் மத்தேயு கறைபடிந்தவர்.

மத்தேயுவைப் பொறுத்தவரையிலும் அவர் கறைபடிந்தவர் தான். ஆனால் அவர் தன்னுடைய பாவத்தை உணர்ந்தார். ஏனென்றால், மனந்திரும்பாத எவரையும் தேவன் தன்னைப் பின்பற்றும்படிக்கு அழைக்கமாட்டார்.

மத்தேயு இயேசுவை தேவனென்று ஒருவேளை அறியாமலிருந்திருக்கலாம்.

அந்த நம்பிக்கையில்லாத கூட்டத்தின் அங்கத்தினராய் மத்தேயு இருந்திருக்கலாம்.

சிலர் இவரை எரேமியா என்று கருதினர்.

சிலர் இவரை எலியா என்று கருதினர்.

சிலர் இவரை தீர்க்கதரிசிகளில் ஒருவராய் கருதினர்.

அவரை யார் என்று அவர்களால் உறுதியாய் அறியமுடியவில்லை.

நாம் சிலுவையண்டையில் நின்று, பாவத்தை விட்டு மனந்திரும்பி, தேவன் நம்மை மன்னிப்பார் என்பதை அறியுங்கள் என்னும் செய்தியையே இயேசு பிரசங்கித்தார். அந்த மன்னிப்பிற்காய் இருதயத்தின் ஆழத்திலிருந்து கதறவேண்டும்.

**லூக்கா 18:13, ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்.**

ஆயக்காரன் பாவம் மன்னிக்கப்பட்டவனாய் வீடு திரும்பினான்.

பழைய ஏற்பாட்டின் அடிப்படையிலேயே, தேவன் பாவத்தை மன்னிக்கிறார். நியாயப்பிரமாணத்தின்படி, தன்னுடைய இருதயத்திலிருக்கும் கசப்புகளை உணர்ந்து, அதிலிருந்து விடுபடவேண்டும் என்னும் எண்ணமுள்ளவர்களுக்கு தேவன் மன்னிப்பை அருளுகிறார்.

தங்களை தரித்திரராய், கட்டுண்டவர்களாய், குருடராய், ஒடுக்கப்பட்டவராய், மன்னிப்பின் தேவையை உணர்ந்தவராய், சுத்திகரிக்கப்படுதலின் அவசியத்தை உணர்ந்து தேவனிடத்தில் கதறும்போது தேவன் மன்னிப்பைக் கொடுக்கிறார்.

இயேசுவும் அவருடைய இருதயத்தைப் பார்த்து, அவர் தன்னை தகுதியில்லாதவர் என்று நம்பினதினால், அவர் மன்னிப்பிற்காய் தேவனை சார்ந்து கொள்வார் என்பதையும் பார்த்தார். அந்த இடத்திலேயே இயேசு அவரை மன்னித்தார். அவரை அப்போஸ்தலர் என்றும் அழைத்தார்.

**அவருடைய இருதயம் மாறியது என்று நமக்கு எப்படி தெரியும்?**

**லூக்கா 5:28, அவன் எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, அவருக்குப் பின்சென்றான்.**

இவர் ஐசுவரியவானாயிருந்த அந்த இளைஞனைப் போல அல்ல.

அவன் வேறு திசையாய் புறப்பட்டு போனான். அவன் தன்னுடைய பாவத்தை உணர்ந்து இயேசுவிடத்தில் தன்னை ஒப்புக்கொடுக்கவில்லை.

மத்தேயு எல்லாவற்றையும் விட்டுவிடுகிறார். முழுமையான ஓர் தொடர் இழப்பு. மத்தேயு தன்னுடைய வேலையை விட்டுவிட்டு போகிறார். அந்த இடத்தை நிரப்புவதற்கு அநேக துன்மார்க்கர் வரிசையில் இருந்தனர். அதை விட்டுவிட்டு போனால், ஓரிரு நாட்களிலேயே அதை நிரப்புவதற்கு ஆட்கள் காத்திருந்தனர். அதை மீண்டும் போய் திரும்பி வாங்கவும் முடியாது.

மீன்பிடி தொழில் செய்துவந்த மற்ற அப்போஸ்தலர்களின் அர்ப்பணிப்பைக் காட்டிலும் மத்தேயு இயேசுவை பின்பற்ற தீர்மானித்தது, வெகு விமரிசையாக இருந்திருக்கும் என்று சொல்ல முடியும். இயேசு சொன்னதுபோல "உங்கள் வலைகளை விட்டு, என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷர்களை பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றவுடன் உங்கள் வலைகளை எளிதில் விட்டுவிட முடியும். ஆனால் மீண்டும் அந்த தொழிலுக்கு தாங்கள் திரும்பி போக முடியும். அங்கே அவர்களுக்கு எப்போதும் மீன்கள் கிடைக்கும். மீன்பிடிக்கும் ஏரியில் யாரும் உங்களை தடுக்கப்போவது இல்லை.

யோவான் 21இல் அவர்கள் தங்கள் பழைய தொழிலுக்கு திரும்பிப் போகிறார்கள் என்று பார்க்க முடியும்.

ஆனால் ஆயத்துறையை விட்டுவிட்டு வந்தால், அத்துடன் உன் தொழில் முடிந்துவிட்டது. இது மிகப்பெரிய சிரமம். ஆகையினால், எந்நேரமும் தங்கள் தொழிலுக்கு திரும்பமுடியும் என்ற நிச்சயத்தோடு தங்கள் மீன்பிடி தொழிலை விட்டுவந்த அப்போஸ்தலரைக் காட்டிலும் மத்தேயுவின் விசுவாசம் சற்று பெரியதே. அவர் தன் தொழிலுக்கு திரும்பி போக முடியாது. அவர் திரும்பிப்போகவும் விரும்பவில்லை.

இயேசுவைப் பின்பற்ற மத்தேயு எடுத்த இந்த தீர்மானம் அவருடைய வாழ்க்கை முழுவதும் தொடர்ந்தது. தன் முந்தின தொழிலை ஒரேயடியாய் விட்டுவிட்டு, புதிய பாதையில் தொடரும் இந்த செய்கை பரிசுத்தமாகுதலைக் காண்பிக்கிறது.

இது இரட்சிப்பின் கிரியைக்கான அடையாளம் என்பது கீழ்க்கண்டவைகளால் உறுதிபடுத்தப்படுகிறது.

- அவர் தீர்க்கமான ஒரு பாதையை விட்டுவிட்டு தொடர்ச்சியான ஒரு பாதையை தெரிந்துகொண்டார்.
- அவர் எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளி, எழுந்தார் என்பதே அந்த இடைவெளி.
- அவர் தொடர்ந்து பின் தொடர்ந்தார் என்பதே அந்த மாதிரி.

- அவர் மறுபிறப்படைந்தார்.
- அவர் புதிய சிருஷ்டியாயிருந்தார்.
- அவருக்கு புதிய எதிர்பார்ப்புகள், புதிய ஏக்கங்கள், புதிய உணர்வுகள், புதிய சிந்தை, புதிய சித்தம் என்று எல்லாம் புதிதாய் மாறியது.

அவர் தன்னுடைய பாவ வாழ்க்கையை உணர்ந்து அதிலிருந்து விடுபடவேண்டும் என்னும் ஏக்கத்துடன் இருந்த அவர், தேவன் தன்னை மன்னித்து, இதிலிருந்து விடுபட செய்யவேண்டும் என்று எதிர்பார்த்தது இயல்பு.

இயேசு தன்னை பின்பற்றும்படி கூறியபோது, அவர் உடனே அவரைப் பின்தொடர்ந்தார்.

இயேசுவைத் தேடிவந்த திமிர்வாதக்காரனைப் போலல்லாமல், இயேசு மத்தேயுவை தேடிவந்தார்.

யூத மார்க்கத்தின் கடுமையான அமைப்பு, மத்தேயு பெற்றுக்கொள்ள வாய்ப்பேயில்லை என்று கருதியிருந்த மன்னிப்பையும், இரட்சிப்பையும், நீதியையும் இயேசு அவருக்குக் கொடுக்கிறார். மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் வாஞ்சையோடு இருந்த அவர் அதை பெற்றுக்கொண்டார்.

அவர் உடனடியாய் பதிலளித்தார். துரோகி, துன்மார்க்கன், திருடன், ஒதுக்கப்பட்டவன், பாவி என்னும் அங்கீகாரத்தோடு இருந்தவர், அப்போஸ்தலனாகவும் இயேசுவின் சுவிசேஷகனாகவும் மாறுகிறார்.

- மத்தேயு தன்னுடைய தற்காலிகமான வேலையை விட்டுவிட்டு, நித்திய மேன்மையை தெரிந்துகொண்டார்.
- அவர் உலக ஆஸ்திகளை விட்டுவிட்டு ஆவிக்குரிய மகிமையான எதிர்காலத்தை சுதந்தரித்துக்கொண்டார்.
- பூமியில் உள்ள பாதுகாப்பை விட்டுவிட்டு பரலோகத்தின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொண்டார்.
- அவர் தன்னுடைய பாவ சிநேகிதங்களை விட்டுவிட்டு, ஜீவனுள்ள கிறிஸ்துவோடு ஐக்கியம் கொண்டார்.

இயேசு பாவிகளை இரட்சிக்கவே வந்தார் என்பதை அவர் அறிந்துகொண்டார்.

**லூக்கா 5:32, நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார்.**

மத்தேயுவுக்கு என்ன நடந்தது என்பதற்கான விளக்கவுரை இதுவே. இயேசு மனந்திரும்புதலுக்கு அழைக்க வந்த பாவிகளில் மத்தேயுவும் ஒருவர். தேவனுடைய ஆவியானவருடைய கிரியை அவருடைய இருதயத்திற்குள் செயல்பட துவங்கி, மன்னிப்பின் அவசியத்தை ஏற்படுத்தி, ஆவியானவரின் மூலம் ஏற்படுத்தப்பட்ட சுத்தமான விசுவாசம் அவருக்குள் கிரியை செய்து, கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட இரட்சிப்பின் மூலம் பழைய வாழ்க்கையோடிருந்த தொடர்பை விடுத்து, புதிய வாழ்க்கைக்குள் பிரவேசிக்கச் செய்தது.

**லூக்கா 5:29, அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்துபண்ணினான். அநேக ஆயக்காரரும் மற்றவர்களும் அவர்களோடேகூடப் பந்தியிருந்தார்கள்.**

தன் வீட்டில் பெரிய விருந்தை அயத்தப்படுத்துகிறவராயிருந்தால், அவருக்கு நிச்சயமாய் பெரிய வீடு இருந்திருக்கவேண்டும். அவர் ஐசுவரியவானாயிருந்தார் என்பதற்கு இது இன்னொரு ஆதாரம். துவக்கத்தில் மற்ற எல்லா அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அதிக செல்வம் படைத்தவராய் மத்தேயு இருந்துள்ளார்.

அவற்றையெல்லாம் விட்டுவிட்டார். ஆனாலும் ஒரு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தினார். இது அவருடைய இருதயத்தில் என்ன நடந்தது என்பதற்கான மற்றுமொரு ஆதாரம்.

"உண்மையான கிறிஸ்தவன் பரலோகத்திற்கு தனியே செல்லமாட்டான்."

மன்னிப்பைப் பெற்று, இருதயம் மறுரூபமாக்கப்பட்டவுடன், இந்த உலகத்தில் தனக்கு தெரிந்தவர் எல்லோரையும் அழைப்பித்து, தன்னுடைய இரட்சகருக்கு அறிமுகப்படுத்துகிறார்.

மத்தேயு இயேசுவுக்கு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்துகிறார். மாம்சத்தில் அவதரித்த தேவ குமாரன் இந்த பெரிய விருந்தில் பங்குகொள்ளப் போகிறார்.

**யாருக்கு நாம் அழைப்பு கொடுக்கப்போகிறோம்?**

வேதபாரகர்கள், பரிசேயர்கள், மதத்தலைவர்கள், இன்னும் சில சதுசேயர்களை அழைக்கலாம்?

சில ராஜாக்கள் மற்றும் அதிபதிகள்?

உயர்குல மக்கள்?

இல்லை! இல்லவே இல்லை!!

அவருடைய வீட்டில் அவருக்கு கொடுக்கப்பட்ட பெரிய விருந்தில், பெரிய ஆயக்கார கூட்டத்திற்கு அழைப்பு கொடுக்கப்பட்டது.

**ஏன்?**

அவர்களை மட்டுமே மத்தேயு அறிந்திருந்தார். வரிவசூலிக்கும் துன்மார்க்கமான சிநேகிதர்களோடே மத்தேயு வேலை செய்தார்.

அவர்களை பாவிகள் என்று மத்தேயு அழைக்கிறார். எல்லா இடங்களிலுமிருந்த ஆயக்கார கூட்டமான கப்பாய் மற்றும் மோகஸ் பிரிவுகளை சேர்ந்த அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் ஏற்கனவே அறிமுகமானவர்கள். அவர்கள் இயேசுவை ஒரு மாயவித்தைக்காரராய் அறிந்திருந்தனர்.

இயேசு மிகவும் ஆன்மீகமான ஒரு நபர் என்பதினால் அவரிடத்தில் நெருங்குவது சாத்தியமில்லை என்று அவர்கள் நம்பியிருந்திருக்கக் கூடும்.

அவர் தேவனுக்காய் பேசுகிறார்.

அவர் தேவனிடத்திலிருந்து நற்செய்தியை பிரசங்கிக்கிறார்.

அவர் மக்களை சுகமாக்குகிறார்.

அவர் நம்மை எப்போதுமே சுகமாக்கமாட்டார்,

அவர் நம்மை விரும்பமாட்டார்,

நாமெல்லோரும் கொள்ளையர்களும் கடினமானவர்களுமாயிருக்கிறோம்.

ஆனால் அதற்கு முரணாக, அவர்களில் ஒருவர் இரட்சிக்கப்பட்டு, ஒரு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். இயேசுவை சிறப்பு விருந்தினராய்

அழைக்கிறார். தனக்கு தெரிந்த தன் சிநேகிதர்களை மட்டுமே விருந்துக்கு அழைக்கிறார்.

திருடர்கள், குண்டர்கள், அடியாட்கள், அநீதிக்காரர்கள், மதுபான வெறியர், விபச்சாரிகள், அனைத்து தர துன்மார்க்கர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் என்று இயேசுவோடு பந்தியிருப்பதற்கு அழைப்பு கொடுக்கப்பட்ட இந்த விருந்து, அவர்களுக்கு மிகவும் வித்தியாசமான அனுபவமாய் இருந்திருக்கும். இவர்களே மத்தேயுவின் விருந்தாளிகள்.

“அநேக ஆயக்காரரும் மற்றவர்களும் அவர்களோடேகூடப் பந்தியிருந்தார்கள்.”

**ஏன்?**

அது ஒரு நீளமான விருந்து.

அவர்களுக்கான நாற்காலியில் அமர்ந்து பத்து நிமிடத்தில் எழுந்துபோகவில்லை. அவர்கள் அமர்ந்திருந்து, பேசி, உணவு உட்கொண்டனர். லூக்கா சுவிசேஷத்தில் பத்து விருந்துகளை நாம் பார்க்கமுடியும். ஏனெனில், அந்த தருணத்தில் மிக முக்கியமான உரையாடல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இயேசு அங்கே இருந்தார். மனந்திரும்பிய மகிழ்ச்சியோடு மத்தேயுவும் அங்கே இருந்தார். சீஷர்கள் அங்கே இருந்தனர். பின், உலகத்தின் அத்தனை அயோக்கியர்களும் அங்கு இருந்தனர்.

அங்கே என்ன உரையாடல் நிகழ்ந்திருக்கும் என்பதை ஊகிக்கமுடியாது.

ஆனால் இதுவே மிஷனரி பணித்தளம்.

உங்களுடைய வேலை ஸ்தலமே உங்களுடைய மிஷனரி பணித்தளம்! அதை மறந்துவிடாதேயுங்கள்!

நீண்ட காலமாய் கிறிஸ்தவராய் இருக்கும்போது இந்த குழுவுடன் இருக்கும் ஐக்கியம் உங்களுக்கு குறைய நேரிடும்.

தேவனை அறிகிற அறிவில் நீண்ட காலமாய் இருக்கும்போது, நாம் சந்திக்கவேண்டிய ஜனங்களிடமுள்ள தொடர்பிலிருந்து நாம் தனிமையாக்கப்படுகிறோம். நாம் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை விரும்புவதால், கிறிஸ்தவர்களாலேயே சூழப்பட்டுள்ளோம்.

இங்கே புதிதாய் இரட்சிக்கப்பட்டவரின் இரட்சிக்கப்படாத நண்பர்கள் இயேசுவைக் காணவேண்டி வாஞ்சையோடு இருந்தனர். இந்த பெரிய விருந்தானது மத்தேயுவின் பழைய வாழ்க்கைக்கு முடிவாகவும் புதிய வாழ்க்கைக்கு ஓர் துவக்கமாகவும் அமைகிறது. அனைத்திற்கும் மேலாக, இது ஒரு நற்செய்தி விருந்து, இயேசுவே அதின் சிறப்பு விருந்தினர்.

அவர் நீதிமான்களை ஒதுக்கினார்.

**லூக்கா 5:30, வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்.**

இவர்கள் இந்த பந்திக்கு அழைப்பு பெறவில்லை.

இவர்கள் அந்த வீட்டிற்குள் போகமாட்டார்கள்.

அங்கிருப்பவர்களெல்லோரும் அசுத்தமான மக்கள்.

ஆனால் அங்கு பந்தி நடந்துகொண்டிருப்பது அவர்களுக்குத் தெரியும். அந்த இடத்தைச் சுற்றிலும் அவர்கள் ஒருவேளை நிரம்பியிருக்கக்கூடும். அங்கே நடந்துகொண்டிருப்பதை அவர்கள் கேட்டு அறிந்திருக்கவும் முடியும். திமிர்வாதக்காரனை சுகமாக்கிய சம்பவத்திலும் இவர்கள் இருந்தனர். அதற்கு பின்பு அவர்கள் சீஷர்களிடத்தில் கேள்வியெழுப்பியிருந்திருக்கக்கூடும்.

**நீங்கள் ஏன் ஆயக்காரர்களோடும் பாவிகளோடும் புசித்துக் குடிக்கிறீர்கள்?**

**நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள், இது ஒழுக்கக்கேடான செய்கை?**

**இந்த ஜனங்களோடு நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?**

இயேசுவும் அவரது சீஷர்களும் நியாயப்பிரமாணத்தை ஓரளவாவது பின்பற்றுவார்கள் என்றும் அதின் வரையறையை கைக்கொள்ளுவார்கள் என்றும் அவர்கள் எண்ணியிருந்தனர்.

வேதபாரகரும் பரிசேயரும் நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளோடு ஒன்றி வாழ்ந்தவர்கள். இயேசு அவற்றை தோலுரித்து காண்பித்ததினால் அவர் மீது எரிச்சல்கொண்டனர்.

ஆனால் இங்ஙனம் இயேசுவும் அவரது சீஷர்களும் ஒதுக்கப்பட்ட இந்த கூட்டத்தினரோடு ஐக்கியங்கொள்ளுவதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

**ஏன் இதைச் செய்கிறீர்?**

அவர்களில் ஒழுக்கம் சார்ந்த கூட்டமே அதிகம்.

ஒழுக்கத்தை மையப்படுத்தும் அதிகமானோர் தேவனுக்குத் தேவையில்லை. பரிசுத்தத்தை மையப்படுத்தும் குறைவானோரே தேவனின் தேவை. அவர்கள் வெளிப்புற வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். வெளியரங்கமான பார்வைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள்.

அவர்கள் ஒழுக்கமாய் வாழ்ந்தார்கள், ஆனால் பரிசுத்தமாய் இல்லை.

அவர்கள் கிருபையை விட்டும் இரட்சிப்பை விட்டும் கோணலாய் பயணித்தார்கள்.

அவர்கள் தேவனில்லாமல் வாழ்ந்தனர்.

இயேசு இந்த ஒழுக்கம் சார்ந்த கூட்டத்திற்கு தன் புறுமுதுகைக் காண்பித்து, பாவிகளை பரிசுத்தவான்களாய் மாற்றுவதற்கே பிரயாசப்பட்டார்.

**ஆயக்காரர்களோடும் பாவிகளோடும் நீங்கள் ஏன் உட்கார்ந்து புசித்துக் குடிக்கிறீர்கள்?**

அவர்கள் தங்கள் சீற்றத்தை சீஷர்களிடம் வெளிப்படுத்துகிறார்கள். உண்மையாக நீதிமான்கள் யாரும் எப்போதுமே இதுபோன்ற கூட்டத்தோடு ஐக்கியம் கொள்ளவே மாட்டார்கள் என்று சீஷர்களை அவர்கள் குற்றப்படுத்தினார்கள்.

இயேசுவின் ஊழிய காலம் முழுவதும் இந்த பிரச்சனை போய்க் கொண்டேயிருந்தது. ஏனென்றால், இயேசு எப்போதுமே பாவிகளோடே இருந்தார், அவர்கள் தங்களை நீதிமான்களாய் பார்க்கச் செய்தார்.

இயேசு அவர்களின் கூற்றைக் கேட்கிறார்.

**லூக்கா 5:31, இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை.**

**அவருடைய பதில் ஒரு ஒப்புமையோடு விளக்கப்படுகிறது:**

சுகமாய் இருக்கிறவர்களிடத்திற்கு வைத்தியர்கள் போகமாட்டார்கள். ஆனால் வியாதியஸ்தர்களுக்கு வைத்தியர்கள்; தேவை.

**பரிசேயர்கள் வாதிட முடியுமா?**

அவர்கள் வியாதியஸ்தர்களிலும் வியாதியஸ்தர்கள் என்று அவர்களே ஒத்துக்கொள்கின்றனர்.

பரிசேயரும் வேதபாரகரும் அவர்கள் எவ்வளவு நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள் என்பதை காணமுடிந்திருந்தால், அவர்கள் எவ்வளவு பலமுள்ளவர்கள் என்பதை அறிய முடிந்திருந்தால், மருத்துவர் அவர்களிடம் செல்வது எவ்வளவு முக்கியம் என்பதை அவர்கள் ஏன் பார்க்க முடியாது.

**அப்படியென்றால், ஒரு மனிதனை தன்னுடையவைகள் எல்லாவற்றையும் உதறிவிட்டு வரும்படி செய்தது எது?**

அவர் ஒரு பொருளாசைக்காரர் என்று நீங்கள் நினைத்திருக்கலாம்.

அவர் பாவியிலும் ஒரு பாவி என்று நீங்கள் நினைக்கலாம்.

ரோமர்களின் விக்கிரக ஆரதனையோடு தொடர்புபடுத்திக்கொள்ளும் அளவிற்கு, மார்க்கம் அவ்வளவு முக்கியமாய் தெரியவில்லை என்று நீங்கள் எண்ணலாம்.

அவர் தேர்ந்தெடுத்த இந்த தொழிலின் மூலமாய் அவருடைய ஆத்துமா எந்த விதமான மனஉளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தாலும் மத்தேயு ஒரு யூதர். ஒரு யூதன் தன்னுடைய இருதயத்தின் ஆழத்தில் பழைய ஏற்பாட்டை அறிந்திருத்தல் இயல்பு.

மத்தேயு பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்திருந்தார் என்பது நமக்கு தெரியும். ஏனென்றால், அவருடைய சுவிசேஷ புத்தகத்தில் 99 முறை பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காண்பிக்கிறார். அது மற்ற சுவிசேஷகர்களாகிய மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோரின் சுவிசேஷங்களைக் காட்டிலும் அதிகம். அவருக்கு பழைய ஏற்பாட்டோடு அதிக பரீட்சையம் இருந்தது.

அவர் ஜெப ஆலயத்திற்குள் பிரவேசிக்க அனுமதியில்லை என்பதினால், அங்கு போய் அங்கே போதிக்கப்படுகிற போதனைகளைக் கேட்டு பழைய ஏற்பாட்டை

அறிந்துகொள்ள வாய்ப்பில்லாததால் அவரே தானாக முன்வந்து பழைய ஏற்பாட்டைக் குறித்த அறிவில் தேறியிருக்கவேண்டும்.

யூதர்களின் பழைய ஏற்பாடு மூன்று உட்பிரிவாய் பிரிகிறது. நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசிகள், மற்றும் பொதுவான எழுத்துக்கள்.

மத்தேயு இவைகள் எல்லாவற்றிலுமிருந்து மேற்கோள் காட்டுகிறார்.

ஆகையால் பழைய ஏற்பாட்டின் அனைத்துப் பிரிவுகளையும் அவர் அறிந்திருந்தார். அதோடு, பரீட்சையமாயிருந்தார். ஆகையினால் மேசியாவைக் குறித்து முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனம் அவருடைய அறிவுக்கு உட்பட்டதே. அவருடைய சுவிசேஷம் முழுவதிலும் அது இடம்பெற்றுள்ளது.

அவர் உண்மையான தேவனை நம்பினார்.

அவர் பதிவுசெய்யப்பட்ட தேவனுடைய வெளிப்பாடான பழைய ஏற்பாட்டை அறிந்திருந்தார்.

அவர் மேசியாவின் வருகையைக் குறித்து அறிந்திருந்தார். ஆகையினால் இயேசு வரும்போது அவரை சரியாய் அடையாளம் கண்டுகொண்டார். ஏனென்றால், ஆயத்துறையில் அமர்ந்துகொண்டு, பாலஸ்தீனத்தில் வியாதியை சுகமாக்குகிறார் என்றும் ஜனங்களிடமிருந்து பிசாசை விரட்டுகிறார் என்றும் இயேசுவைக் குறித்து வருவோர் போவோரிடமிருந்து கேட்டு அறிந்திருக்கக்கூடும்.

இயேசுவின் செல்வாக்கு அதிகமாய் பெருகியிருந்தது. இயேசு அவரிடம் வந்து எனக்கு பின்சென்று வா என்று சொல்லும்போது, அவரை மேசியா என்றும் தேவனுடைய தீர்க்கதரிசி என்றும் நம்பக்கூடிய அளவிற்கு தன்னுடையவைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரை பின்பற்றுமளவிற்கு மத்தேயுவுக்கு விசுவாசம் இருந்தது.

ரோமர்களோடு ஐக்கியமாயிருந்தாலும் அவருடைய தெளிவற்ற இருதயத்தில், அவருடைய தேவனுக்காய் சற்று அன்பு வைக்கப்பட்டிருந்தது. யூத மார்க்க ஒழுங்கின்படி அவர் ஒதுக்கப்பட்டவராய் கருதப்பட்டாலும், அவருக்கு தேவனை ஏற்றுக்கொள்ளும் இருதயமும், சத்தியத்தை பற்றிக்கொள்ளும் ஆர்வமும் இருந்தது. தன்னுடைய மேசியா என்று நம்பின தேவனுடைய தீர்க்கதரிசியை பின்பற்ற இவர் விரும்பினார்.

ஆகையால் மத்தேயு பழைய ஏற்பாட்டை அறிந்தவர்; தேவனை விசுவாசித்தவர்; மேசியாவின் வருகையை எதிர்நோக்கியிருந்தார் என்னும் தகவல்களை நாம் அறிந்துகொள்ள முடியும். அவர் இயேசுவை சந்தித்தவுடன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரை சந்தித்த மகிழ்ச்சியில் உடனடியாய் அவரை பின்பற்ற தீர்மானித்து, தன்னோடு இருந்த ஒதுக்கப்பட்டோர் அனைவரையும் இயேசுவை சந்திக்கும்படி செய்தார்.

இதுவே அவரைக் குறித்து நாம் அறியக்கூடிய தகவல்.

ஆனால், தேவன் சிலவேளைகளில் உயர்தர வரிசையில் உள்ளோரையும் தன் பெரிய தெய்வீக அழைப்பிற்கு பாத்திரவான்களாக்குகிறார் என்பதை அறிந்துகொள்வதற்கு இதுவே போதுமானது.

ஆயக்காரர்கள் ரோமப்பேரரசின் கீழ் வேலை செய்ததால் அவர்கள் தங்கள் சொந்த ஜனத்தால் வெறுக்கப்பட்டனர். இவரோ தனக்குண்டான எல்லாவற்றையும் விட்டுவிட்டார். உபத்திரவபடுவதற்கும் இரத்தசாட்சியாய் மரிப்பதற்காகவும் தன்னுடைய பாதுகாப்பான ஸ்தானத்தையும் சௌக்கியத்தையும் விட்டுவிட்டார். இயேசுவோடான புதிய வாழ்க்கைக்காய் மத்தேயு தன்னுடைய பழைய வாழ்க்கையை இழக்கிறார்.

## மத்தேயுவின் தனிப்பட்ட வாழ்க்கை

**லயானைச் சேர்ந்த ஐரேனியஸ்** (இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்), மத்தேயு யூதர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்று சொல்லுகிறார்.

**அலெக்ஸந்திரியாவின் கிளமெண்ட்**, மத்தேயு இந்த ஊழியத்தைத் தொடர்ந்து 15 ஆண்டுகள் செய்துவந்தார் என்கிறார். யூசிபியஸ், சுவிசேஷத்தை மத்தேயு எழுதிய பின், அவர் மற்ற தேசங்களுக்கும் கடந்துபோனார் என்கிறார். பல எழுத்தாளர்கள், மத்தேயு எத்தியோப்பியாவில் சுவிசேஷ ஊழியம் செய்தார் என்கின்றனர். ஆனால் இந்த எத்தியோப்பியாவை ஆப்பிரிக்காவில் இருந்ததாக காண்பிக்காமல், காஸ்பியன் கடலின் தெற்கு பக்கத்தில் இருந்ததாக காட்டுகின்றனர். மற்றவர்கள் இவரை பெர்சியா, மக்கதோனியா, மற்றும் சீரியா போன்ற தேசங்களில் ஊழியம் செய்ததாக குறிப்பிடுகின்றனர்.

**“ஆக்டா அப்போஸ்டோலோரும் அப்போகிரிஃபா”** என்னும் பதிவு மத்தேயுவின் மரணத்தைக் குறித்து கூறுகிறது. மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

மத்தேயுவின் நடபடிகள், குழந்தை இயேசுவைக் குறித்த தரிசனத்தோடு துவங்குகிறது. இதில் மத்தேயு **முதலாம் ஏரோது ராஜாவின்** இருப்பிடத்தைக் குறித்து இயேசுவிடம் கேட்கிறார். அவர் நித்திய நரகத்தின் அக்கினியில் இருப்பான் என்று அறிவிக்கப்படுகிறது. இயேசுவின் கட்டளையின் பேரில், **மிர்னா** என்று அழைக்கப்பட்ட நரமாமிச உண்ணிகளின் பட்டணத்திற்கு மத்தேயு கடந்துசென்று, அங்கு புனிதர் அந்திரேயாவினால் ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபையை பார்வையிடுகிறார். ராஜாவின் மனைவியையும் அவருடைய மகனையும் வலிமையான பிசாசின் பிடியிலிருந்து விடுவித்த பின்பு, **பிஷப் பிளாட்டோவை** சார்ந்து, பல அற்புதங்களை நடப்பித்து, பல்வேறு புறஜாதியினரை தேவனண்டை நடத்தினார். மத்தேயுவின் கொம்பு கனிகொடுக்கும் மரமாய் வளர்ந்து, மிர்னாவிலிருந்த எண்ணற்றவர்களை போஷித்தது.

தன்னுடைய மனைவி மத்தேயுவின் சீடரானதால், ராஜா அதைக்கண்டு கோபப்பட்டு மத்தேயுவை உயிரோடு கொல்லுவதற்கு உத்தரவிடுகிறார். மத்தேயுவை கொல்லுவதற்கு பற்ற வைக்கப்பட்ட நெருப்பு, அவரை உபத்திரவப்படுத்தியவர்களையும் அவர்களுடைய விக்கிரகங்களையும் எரித்துப் போட்டது. ஆயினும் அந்த ராஜா உடனே மனந்திரும்பவில்லை. இன்னும் பல அற்புத அடையாளங்களை நிகழ்த்திய பின், ராஜா விக்கிரகங்கள் எல்லாவற்றையும் தகர்த்தெரிந்து, “இனி பல தெய்வ வழிபாடு இருக்கக்கூடாது; ஒரேயொரு தெய்வமே, அவரே பரலோகத்தின் தேவன்” என்ற அறிக்கையை வெளியிட்டார். பிஷப் பிளாட்டோவின் மரணத்திற்கு பின்பு, மத்தேயுவின் பெயரையே உடைய அந்த ராஜா அவருடைய ஸ்தானத்தில் ஏற்படுத்தப்பட்டார்.

கோல்டன் லெஜன்ட் என்னும் மத்தேயுவின் வாழ்க்கையைக் குறித்த மற்றுமொரு பதிவு அவருடைய முடிவு சுபமாய் அமையவில்லை என்கிறது. தன்னுடைய மனைவி அவளுடைய வாழ்க்கையை துறவறத்திற்கு அர்ப்பணித்ததைக் கேள்விப்பட்ட ராஜா, மத்தேயுவை பட்டயத்தால் கொலை செய்யும்படி கட்டளையிட்டார். மத்தேயுவை கொலை செய்யும் மனிதர்கள் அவருக்கு பின்பாக நிற்க, மத்தேயு தன் இரண்டு கரங்களையும் வானத்திற்கு

நேராய் உயர்த்தி ஜெபிக்க, பின்பாக இருந்து வீசப்பட்ட பட்டயம் அவருடைய இரத்தசாட்சியான மரணத்திற்கு காரணமாகியது.

அவருடைய மரணத்தைக் குறித்து பல்வேறு முரண்பாடான கருத்துக்கள் நிலவுகிறது.